# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் 30.04.2017 அன்று ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமின் இரண்டாவது தவணை நடைபெறவுள்ளது. இம்முகாமில் பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட 70,527 குழந்தைகள் பயன்பெறவுள்ளனர்.

02.04.2017 அன்று நடைபெற்ற தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் முதல் தவணையில் அரியலூர் மாவட்டத்தில் 71092 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. இது 100 சதவீத சாதனையாகும்.

அரியலூர் மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம்கள் கிராமப்பகுதியில் 498 மையங்களும், நகர்புறங்களில் 46 மையங்களும் என 544 போலியோ சொட்டு மருந்து மையங்கள் செயல்படவுள்ளன.இம்மையங்களுடன் நடமாடும் குழு ,பேருந்து நிலையங்கள், இரயில் நிலையம், மற்றும் முக்கிய பொது இடங்களிலும், பணி நிமித்தமாக வெளிமாவட்டம் மற்றும் மாநிலங்களிலிருந்து சிமெண்ட தொழிற்சாலை பணிகளுக்கு இடம் பெயர்ந்து வசிப்பவர்களின் ஐந்து வயத்திற்கு உட்பட்ட 549 குழந்தைகளுக்கும் சிறப்பு மையங்கள் ஏற்படுத்தி போலியோ சொட்டு மருந்து வழங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களில் பொது சுகாதாரத்துறை, அங்கன்வாடி பணியாளர்களுடன் பிற துறை பணியாளர்கள்,தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ரோட்டரி சங்கங்கள் என 2088 பணியாளர்கள் பணியாற்றவுள்ளனர். இப்பணிகளுக்கு 50 அரசு துறை வாகனங்கள் பயன்படுத்தபடவுள்ளது.

இம்முகாமிற்கு தேவையான போலியோ சொட்டு மருந்துகள் பெறப்பட்டு குளிர்சாதன வசதிகளுடன் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசால் வழங்கப்படும் போலியோ சொட்டு மருந்து மிகவும் தரமானது, பாதுகாப்பானது உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றது.

எனவே, அனைத்து 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு ஏற்கனவே போலியோ சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும் இரண்டாம் தவணை முகாம் நாளான 30.04.2017 அன்று தவறாமல் போலியோ சொட்டு மருந்து அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.